1978 மார்ச் 1

திரு. ஏ. ரகுமான்கான் ; அமைச்சர்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்தப் பிரச்னையைப் பற்றி ஒவ்வொருவரும் தனித்தனியாக கேட்டுக் கொண்டிருக்க, அதற்கு நேரத்தை வீணுக்க விரும்பவில்லை. ஆகவே, இதை அனுமதிப்பதற்கு இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பாயின்ட் ஆப் ஆர்டர், இந்த மன்றத்திற்கு வருகின்ற நேரத்தில் எல்லாம் பல்வேறு புத்தகங்கள் ஏடுகள் இம்மாதிரி வைக்கப்படுகின்றது. இப்படி ஒவ்வொன்றின் மீதும் இன்பர்மேஷன் கேட்பது முறையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நான் அனுமதிக்கவில்லை என்று சொல்லிவிட்ட பிறகு, இந்த பிரச்சினையை எழுப்ப வேண்டிய அவசியமே இல்லை. ஆகவே, இதிலே ஒழுங்கு பிரச்னைக்கே இடமில்லை. ஏற்கனவே நான் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டேன்.

4. உரிமைப் பிரச்னைகள்.

(அ) 'குங்குமம்', 'முரசொலி'—பத்திரிகைகள் மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்னைகள் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பு.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதியன்று திரு. கே. கந்தசாமி அவர்கள் 'குங்குமம்' வார இதழ் மீதும், திரு. கே சமரசம் அவர்கள் 'முரசொலி' நாளிதழ் மீதும் கொண்டு வந்த உரிமைப் பிரச்னைகள் மீது, ஆசிரியர்களின் விளக்கங்களைக் கேட்டறிந்த பின் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன்.

ஆசிரியர்களை விளக்கம் கேட்டதற்கு, 'குங்குமம்' ஆசிரியர் இவ்வாறு நேர்ந்ததற்காக மிகவும் வருந்துவதாகவும், இனி எச்சரிக்கையோடு இருந்து இம்மாதிரி நேரா வண்ணம் பார்த்துக் கொள்வதாகவும் உறுதி அளித்துள்ளார். எனவே அதை ஏற்று, இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

'முரசொலி' ஆசிரியர், வெளியிட்டுள்ள கார்ட்டூன் ஒரு நகைச்சுவை சித்திரமே தவிர, இச்சட்ட மன்றத்தின எந்த உறுப்பினரையும் குறிக்கவில்லை என்றும், அம்மாதிரியான நோக்கம் வாசகர்களிடத்தில் தோன்றும் கருத்தில் கார்ட்டூன் போடப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்தக் கார்ட்டூனில் எந்த அம்சமும் சட்டமன்ற நடவடிக்கையைக்

குறிப்பது போல் இல்லை என்பதையும் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். எனவே, நகைச்சுவை உணர்வோடு போடப்பட்டது என்று ஆசிரியர் கூறியுள்ளதால், இந்த அவை தனது கண்ணியத்தைக் கருத்தில் கொண்டு இதில் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதிரியான கார்ட்டூன்கள் போடும்போது, அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ பற்றி எந்தவிதமான தவறான கருத்திற்கும் வாசகர்களைக் கொண்டு போவதற்கு வழி இல்லாமல் இருப்பது நல்லது என்ற அறிவுரையையும் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உரிமைப் பிரச்னை.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது,—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் அவர்கள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி கேட்டுள்ளார். அவையில் அப் பிரச்சனையைக் கொண்டுவர அனுமதி அளிக்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் வருத்தத்தோடுதான் நான் மீண்டும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் மீது இப்படிப்பட்ட ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனக்கு இந்தப் பத்திரிகையைப் பழிவாங்கும் எண்ணம் சுத்தமாக இல்லை என்பதை முதலிலே கிளியர் செய்துவிட்டு, அதே நேரத்திலே அங்கத்தினர்களுடைய அந்தஸ்து பற்றிய பிரச்னை இந்த அவையிலே வருகின்ற போது, அதிலே நான் பெர்மாக டிபெண்டு பண்ணுவேன். இதிலே என்ன கான்சிகுவென்சு வந்தாலும் நான் கவலைப்படவில்லை.

அன்றைக்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' மீது நான் எழுப்பிய உரிமைப் பிரச்னை பற்றி தாங்கள் ஏற்கனவே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே 3 அம்சங்கள் தெளிவாக இருக்கின்றன.

இன்று, அதனுடைய எடிட்டர் கொடுத்திருக்கக்கூடிய கடிதத்தில் வருத்தம் தெரிவித்திருக்கிறார். இரண்டாவது, இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பேன், இந்தமாதிரி விஷயத்தில் என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் செய்தி ஜனங்கள் பூராவுக்கும் போயிருப்பதால் இந்தச் செய்தியும் மாநிலம் பூராவும் போக வேண்டுமென்றால் அதை அப்படியே பிரசுரித்திருக்க வேண்டும்